

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (10.08.2023) சென்னை, அமைந்தகரை, பில்ரோத் மருத்துவமனையில், மாடு முட்டி காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த சிறுமி ஆயிஷா சித்திக் (வயது 9) சந்தித்து நலம் விசாரித்து, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழு தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, பில்ரோத் மருத்துவமனை உயர் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

### எஸ்.எஸ்.மீரான் தலைமையில்

## துபாயில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

துபாய்,ஆக.11-

துபாயில் நேற்று திங்கட்கிழமை இரவு 8 மணி அளவில் நாசர் ஸ்கொயர் லேண்ட்மார்க் ஹோட்டலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி அமீரக திமுக அமைப்பாளரும், அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினருமான எஸ் எஸ் மீரான் தலைமையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் செல்வி ஆர் ஜே அஞ்சனா வரவேற்புரை நிகழ்த்தினார். சமூக செயல் பாட்டாளரும் எழுத்தாளரும் கவிஞருமான ஆசிப் மீரான் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரை பற்றி உரையாற்றினார் மேலும் நிகழ்ச்சியில் பேசிய எஸ் எஸ் மீரான் அவர்கள் உலகெங்கிலும் வாழும் “வெளிநாடு வாழ் தமிழர்கள்” அனைவரும் “அயலக தமிழர் நலம் வாரியம்” அமைக்க கழக ஆட்சியில் மசோதா நிறைவேற்றி தந்தமைக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை வாழ்க்கை முழுவதும் நன்றி மறவாமல் நினைவு கூற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் அமீரக திமுக நிர்வாகிகள் பிளாக் துளிப் செந்தில், அழகேசன், இன்ஜினியர் பாலா, செந்தில் பிரபு, இளமுருகன், பருத்தி இக்பால், வி எஃப் எஸ் சீனு, அகமது கபீர், பாண்டியன், மேலப்பாளையம் ஃபரீத், சையத் அலி, உம்மல் கேன் ஜாபர், காயல்பட்டினம் அப்துல் காதர், உதயநிதி ரசிகர் மன்ற தலைவர் பாலா, வி கே புரம் பாலா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

மேலும் இந்நிகழ்ச்சியில் ஊடகவியலாளர் முதுவை இதயத்துல்லா, எழுத்தாளர் ஜெசிலா பானு, கான்சிலேட் இஸ்மாயில், அல்ஹசீனா ஷேக் மொய்தீன், அஸ்கான் ரங்கராஜன், மதுரை ஜாய் சி அமுதினி, திருச்சி மத்திய மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அன்பழகன், கேலக்ஸி பதிப்பகம் பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டார்கள்

தோழமைக் கட்சிகள் சார்பில் காயிதே மில்லத் பேரவை பொதுச் செயலாளர் ஹமீது ரஹ்மான், முஸ்லிம் லீக் செயலாளர் பரக்கத் அலி, காமில், கபீர் , மதிமுக இசக்கி துரை, தமுமுக தலைவர் ஹாடி , துபாய் மண்டல தலைவர் உள்பட ஏராளமான கலந்து கொண்டு நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட நடுகுத்தகை ஊராட்சியில் சிடிஎச் சாலை முதல் மூவேந்தர் நகர் வரை முதல்வரின் கிராம சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் 32.67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் மற்றும் சிமெண்ட் சாலை மற்றும் நேரு நகர் பகுதியில் 20 லட்சம் மதிப்பீட்டில் 3 சாலைகள் அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சிக்குழு துணை தலைவர் டி. தேசிங்கு, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஷ்வரி கந்தன், ஒன்றிய குழு உறுப்பினர் யமுனா ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் என்.லட்சுமி, கு.தமிழ்ச்செல்வி, ஊராட்சி மன்ற துணை தலைவர் ஆர்.செந்தாமரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அக்னி மாசெ. ராஜேஷ், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஜார்கண்ட் மாநில முதலமைச்சர்

## ஹேமந்த் சோரன் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக.10-

ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

நல்ல ஆரோக்கியமும், நீண்ட மகிழ்ச்சியான வாழ்க்கையும் அமைந்திட வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி தலைமையில் – நாட்டிலேயே முதன் முதலாக

## பெண் சிறைவாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் நிலையம்!

### புழலில் அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.11

இந்திய சிறைகளில் முதல் முறையாக முழுவதும் பெண் சிறைவாசிகளால் நிர்வகிக்கப்படும் வகையில் புழல், அம்பத்தூர் சாலையில், புழல் பெண்கள் தனிச்சிறை அருகில் புதிதாக கட்டப்பட்ட “ப்ரீடம் பெட்ரோல் விற்பனை நிலைய” (Freedom Filling Station) த்தை நேற்று 10.08.2023 சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர் திருத்தப்பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்.

இப்பெட்ரோல் விற்பனை நிலையத்தில் 30 பெண் சிறைவாசிகள் பணிபுரியவுள்ளனர். இவர்கள் மாத ஊதியமாக தலா ரூ.6,000 பெறுவார்கள்,

இந்த திறப்பு விழாவில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி, ஐ.ஒ.சி.எல். நிர்வாக இயக்குனர் மற்றும் மாநில தலைவர். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, வி.சி.அசோகன், சிறைத்துறைத் துணைத்தலைவர் (தலைமையிடம்) இரா.கனகராஜ், சென்னை சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் ஆ.முருகேசன், புழல், மத்திய சிறை1 கண்காணிப்பாளர் திருமதி. நிகிலா நாகேந்திரன், புழல், மத்திய சிறை கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ். ஐ.ஒ.சி.எல். அலுவலர்களான மாநில சில்லறை வணிகத் தலைவர் பி.கே.ராஜேந்திரா. மாநில சில்லறை வணிகத் தலைவர் II விபின் ஆஸ்டின், மாநிலப் தலைமை தி.க.இளமாறன், சென்னை மண்டல சில்லறை பொறியாளர் வணிக மேலாளர் டி.முத்துக்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு சிறைத்துறையால் நிர்வகிக்கப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் பொதுமக்களிடையே மிகச்சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறைத்துறையால் நடத்தப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெட்ரோல்/டீசலின் தரம் மற்றும் கண்ணியமான சேவைகளால் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர மாநிலத்தில் 5 இடங்களில் சிறைத்துறை சார்பில் பெட்ரோல் பங்க் நடத்த அனுமதி பெறப்பட்டு விரைவில் அவைகள் திறக்கப்பட உள்ளதாக சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி தெரிவித்தார்.



நாட்டிலேயே முதன்முறையாக, புழல் மத்திய சிறையில் பெண் சிறைவாசிகளால் நடத்த தொடங்கி இருக்கும் பெட்ரோல் நிலையத்தை சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி, ஐ.ஓ.சி.எஸ். பெட்ரோலிய அதிகாரிகள் உடனுள்ளனர்.

### களக்காடி எல்லப்பன் தலைமையில் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

## ஜாபர்கான்பேட்டையில் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு நாள்!

### திருவுருவச்சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஆக.11-

சைதை மேற்கு பகுதிக் கழகம் சார்பில் பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் முன்னின்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு ஜாபர்கான் பேட்டையில் திருவுருவச் சிலையை அமைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஜாபர்கான்பேட்டையில் புதியதாக அமைக்கப் பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சிக்கு பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமை வகித்தார். பகுதிச் செயலாளரும், மண்டலக்குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மா.அன்பரசன், ப.சுப்பிரமணி, இரா. ரமேஷ், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், மு.கதிரவன், இ.வரதன், பொ.பரத்குமார், மா.ஏழுமலை, பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத் பாஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் – முனைவர் சு.பாலசுப்பிரமணியன் பங்கேற்பு!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு: முதல் உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு!

### வாகை சந்திரசேகர் – விஜயா தாயன்பனுக்கு விருதுகள்!

சென்னை, ஆக.11-

பன்னாட்டுத் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழியல் மற்றும் பண்பாட்டுப்புலம் - தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு முதல் உலகத்தமிழ் வளர்ச்சி மாநாடு நாளை (12.8.2023- சனிக்கிழமை) காலை 9 மணி முதல் 7 மணி வரை சென்னை, சைதாப்பேட்டை. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், பட்டமளிப்பு விழா அரங்கம் - கல்விப்புல வளாகத்தில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் சென்னை வளர்ச்சிக் கழகம் வழங்கும் வளர் தமிழ் அறிஞர் விருது தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்திக்கு வழங்கப்படுகின்றது.

அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருது - நிறுவனங்கள் என்ற வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - வாகை சந்திரசேகர், விஜயா தாயன்பன், தில்லி தமிழ்ச் சங்கம் - முகுந்தன், தமிழியக்கம், வேலூர் - முனைவர் அப்துல் காதர் - சுகுமாறன்,

ஹூஸ்டன் பல்கலைக் கழக தமிழ் இருக்கை - அமெரிக்கா, பெருமாள் அண்ணாமலை. எத்திராஜ் கல்லூரி தமிழ்த்துறை சென்னை, பேராசிரியர் டாக்டர் நிர்மலா.

புதுமை தமிழச்சி இயக்கம், அபுதாபி ஐக்கிய நாட்டு அமீரகம் - டாக்டர் திருமதி ஸ்ரீதேவி சிவானந்தம் ஆகியோர் பெறுகிறார்கள்.

அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருதுகள் முனைவர் ஒப்பிலா மதிவாணன், சாலமன் பார்த்தசாரதி பிள்ளை, திருமதி முனைவர் ஆர்.அனுராதா, முனைவர் எம்.எஸ்.லட்சுமி, பாலசுப்பிரமணியன் கண்ணன், செல்வி சுதா சுவர்ணலட்சுமி ஆகியோர் பெறுகின்றனர்.

இந்நிகழ்ச்சி காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியினை சென்னை பன்னாட்டுத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத், சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழியல் மற்றும் புலம் - பேராசிரியர், இயக்குநர் முனைவர் க.பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னின்று செய்துள்ளனர்.

### கலைஞர் நிலத்தை உயர்த்தியவர் -வளத்தை வழங்கியவர்! பி.கே.மூர்த்தி தலைமையில்

## அம்பத்தூரில் பேராசிரியர் அப்துல் காதர் தலைமையில் கவியரங்கம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, ஆக. 11 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “கலைஞர் 100” நிலத்தை உயர்த்தியவர், வளத்தை வழங்கியவர் எனும் நிகழ்ச்சி நாளை (12.8.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு அம்பத்தூர் மல்லிகா மகாலில் மண்டலக் குழுத் தலைவர் பி. கே.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, அமைச்சர் பி. கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன்,ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் டி.எஸ். பி. இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ் து. ஆயிரம், எல்.பி.எப்.மோகன், ஜி.சாந்தகுமாரி, ஏ.பி.பூர்ணிமா, வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஜி.வி. நாகவள்ளி, ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மா.பச்சையப்பன், திராவிட செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வே. ரவீந்திரன், பு. வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.ரகு, கு.கண்ணபிரான், எம்.கமல் ‘, எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், பொன்.நவராஜ் ரவி, கோ.சேகர்லால், க.ஜீவா, எஸ்.பி. அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம். அரிகிருஷ்ணன், பி.வி. மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

பேராசிரியர் அப்துல் காதர் கவியரங்கிற்கு தலைமை தாங்குகிறார்.

கவியரங்கில் கவிஞர்கள் கபிலன், விவேகா, யுகபாரதி, அம்பிகா குமரன், தனிக்கொடி, தமிழ்மணவாளன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

வட்டச் செயலாளர் வெ.ராதாகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்.



பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் செவ்வாபேட்டை பகுதியில் அரசு ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளியில்விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு மிதி வண்டிகளை வழங்கினார். அருகில் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயசீலிஜெயபாலன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செல்வராணி, ஒன்றிய குழு உறுப்பினர் வேதவல்லி சதீஷ், ஊராட்சி மன்ற தலைவர் டெய்சிராணி அன்பு, தலைமை ஆசிரியர்கள் வெங்கட் ரவி, சாந்தி, ஜான்சன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் இளவழகன், ஜெயலட்சுமிஅருள்தாஸ், எம்.முரளி, லாவண்யா குமார், ஆரோக்கிய மோகன், ஒன்றிய அவை தலைவர் க.ஜெயராமன், விளையாட்டு அணி துணை அமைப்பாளர்எட்வின் , வி.உதயகுமார், ஐசிஎப் ரவி, சதீஷ் பார்த்திபன், உள்பட பலர் உள்ளனர்.


ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தேனி மாவட்டம்
முத்துலாபுரம்
மொழிப்போர் தியாகி
தி.இராசு
மறைந்தது : 11.08.2016

முத்துலாபுரம் ஈன்ற திராவிட முத்தே!
முத்துவேலர் கருணாநிதிக்கு
பாளைச்சிறையில் பணிவிடை செய்ததை
பாக்கியமாகக் கொண்ட எங்கள் குலச்சொத்தே...!
கழகமே கண்ணாய் வாழ்ந்த கருப்புச் சிங்கமே
சிந்தையெல்லாம் "ஒளியூட்டிய சிவப்புச் சூரியனே"
தி.இராசுவாய் இம்மண்ணில் நீ பிறந்தாய்...
தியாகியாகி தி.மு.க இராசுவாய் மறைந்தாய்!
நீ காட்டிய வழியே... நித்தம் தொடரும் எங்கள் விழியே!
வற்றாத நினைவுகளுடன்...!
ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.
இவண்

இரா.அண்ணா,எம்,ஏ., எம்.பி.ஏ.,
இணை இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

இரா.நல்லதம்பி, பி.பி.ஏ.,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
மாவட்ட ஆட்சியரகம்,
தேனி மாவட்டம்.